DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. கலாவதி | Caste: |
| Father's Name: | திரு. இந்திரஜித் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 5th day of June - 2023.

A1 and A3 to A6 present.

**05.06.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்கா, சித்தலந்தூரில் வசித்து வருகிறேன். என் கணவர் இந்திரஜித் என்பவர் 2015 ஆம் ஆ்ண்டு காலமாகிவிட்டார். நான் கொங்கணாபுரம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் உடற்கல்வி இயக்குநராக பணிபுரிந்து, பணிஓய்வு பெற்றுவிட்டேன். என் உடன் பிறந்தவர்கள் நடராஜன் (எ) நடேசன், ஜெயலட்சுமி, விஜயன் ஆகியோர்கள். என் தாயாரின் பெயர் பழனியம்மாள். என் தகப்பனார் பெயர் தங்கசாமி.

என் சகோதரர் நடராஜன்(எ) நடேசன் கள்ளக்குறிச்சியில் வசித்து வந்தார். அவர் காலமாகிவிட்டார். என் சகோதரரி ஜெயலட்சுமி அரூரில் வசித்து வருகிறார். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். அவருக்கு வாய்புற்றுநோய் ஏற்பட்டு அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 2 மாதங்கள் ஆகிறது. ரேடியேஷன் சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே

அவரால் பேச முடியாது. அவர் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை.

என்னுடைய மற்றொரு சகோதரன் விஜயன் என்பவர் சேலம் மாவட்டம், அரியானூரில் வசித்து வந்தார். அவர் தான் கொலை செய்யப்பட்டுவிட்டார். அவர் விநாயகமிஷன் கல்லூரிக்கு பின்புறம் ஒட்டமரக்காடு என்ற இடத்தில் உள்ள எனது தந்தை வழி சொத்தான சுமார் 9 ஏக்கர் விவசாய பூமியில் வசித்து வந்தார். அவருக்கு திருமணம் ஆகவில்லை.

அவருடன் எனது தாயார் பழனியம்மாள் வசித்து வந்தார். அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் என் சகோதரி ஜெயலட்சுமி வீட்டிற்கு சென்று அங்கு வசித்து வந்தார். எனவே சம்பவ சமயத்தில் விஜயன் மட்டும் தனியாக வசித்து வந்தார். விஜயன் இறப்பதற்கு முன்பாக நாங்கள் பாகம் செய்து கொள்ளவில்லை. எனவே அந்த விவசாய பூமி முழுவதையும் விஜயன் தான் பார்த்துக்கொண்டிருந்தார். எனது தகப்பனார் உயிருடன் இருந்த போது நாங்கள் பாகம் கேட்டோம். அதற்கு முன்பாகவே என் தகப்பனார் அந்த நிலத்தை விஜயன் மற்றும் நடராஜன் ஆகியோருக்கு தானசெட்டிமெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார்.

அதற்கு பின்னிட்டு எனது தகப்பனார் என்னை அழைத்து அவரும் எனது சகோரர்கள் விஜயன் மற்றும் நடராஜனும் அந்த விவசாய நிலத்தை யாரும் விற்ககூடாது என்பதால் அந்த நிலத்தை பொறுத்து பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யும்படி சொன்னார்கள். எனவே நானும், ஜெயலட்சுமியும் சேர்ந்து பாகவழக்கு தாக்கல் செய்தோம். அதன் பின்னிட்டு ஜெயலட்சுமி வழக்கு நடத்த வராததால் நான் மட்டும் வழக்கை நடத்தி வந்தேன்.

கடந்த 2014 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதி பழனிவேல் என்பவர் எனது கணவரை போனில் தொடர்புகொண்டு அரியானூரரில் ஒட்டமரகாட்டிற்கு அருகில்லுள்ள பேய்க்காட்டில் உள்ள பழனிசாமி என்பவரது தோட்டத்தில் எனது சகோதரர் விஜயன் என்பவர் கழுத்து அறுக்கப்பட்டும், வயிற்றில் குத்துக்காயங்களுடனும் இறந்து கிடப்பதாக தகவல் சொன்னார். அந்த சமயத்தில் சங்ககிரி, அக்கம்மாபேட்டையில் வசித்து வந்தேன். மேற்படி போன்தகவலானது காலை

7.00 மணிக்கு கிடைத்தது. அங்கிருந்து புறப்பட்டு காலை சுமார்.8.00 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன்.

நான் சென்று பார்த்தபோது விஜயன் கழுத்து அறுக்கப்பட்ட நிலையிலும், வயிற்றில் தொப்புளை சுற்றி காயங்களுடனும் இறந்து கிடந்தார். தொப்புளுக்கு அருகே குத்துக்காயங்கள் இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்க போலிசாரும் இருந்தார்கள். சுமார் 1 மணிநேரத்தில் அந்த இடத்திற்கு ஆம்புலன்ஸ் வாகனம் வந்து பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். நான் அருகே உள்ள விஜயன் வீட்டிற்கு சென்றேன். சுமார் 1 மணி நேரம் கழித்து அந்த வீட்டிற்கு போலிசார் வந்து என்னை புகார் கொடுக்க சொன்னார்கள்.

எனவே நான் ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார்கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான் அந்த புகார் அ.சா.ஆ.1. அந்த புகாரை நான் சொல்ல சொல்ல எனது பெரியப்பா மகன் பாலசுப்ரமணியன் என்பவர் எழுதினார். அதனை படித்துப்பார்த்து நான் கையொப்பம் செய்தேன். எனக்கு கை நடுக்கமாக இருந்ததால் புகாரை பாலசுப்பரமணியன் எழுதினார்.

யார்மேலாவது சந்தேகம் இருக்கிறதா என்று காவல்துறையினர் என்னிடம் கேட்டார்கள். நான் யார் மீதும் சந்தேகமில்லை என்று சொல்லிவிட்டேன். காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளில் 1ஆம் எதிரியை மட்டும் தெரியும். அவர் எனது உறவினர். அப்பாவழி பங்காளி ஆவார். அவர் ஒட்டமரக்காட்டிலிருந்து சுமார் 1/2 கீ.மீ தொலைவில் வசிக்கிறார்.

<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஒட்டமரக்காட்டிற்கும் நான் குடியிருந்த அக்கம்மாபேட்டைக்கும் சுமார் 30 முதல் 40 கி.மீ தொலைவு இருக்கும்.நான் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றபோது அங்கு போலிசார் இருந்தார்கள். நான் வந்து பார்த்து சுமார் 1 மணி நேரத்திற்கு பிறகு போலிசார் பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அதன்பின்னிட்டு நான் விஜயன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் அங்கு வந்து என்னிடம் புகார் கொடுக்கும்படி கேட்டதின் பேரில் தான் நான்

காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னுடன் உதவிக்காக பாலசுப்ரமணியத்தையும் அழைத்து சென்றேன்.

நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு போலிசார் இருந்தார்கள். அந்த சமயத்தில் நான் எழுதக்கூடிய நிலையில் நான் இல்லை. அதனால் புகாரை பாலசுப்ரமணியன் எழுதினார் என்றால் என்னை கேட்டு எழுதினார். புகார் கொடுத்துவிட்டு நான் மீண்டும் விஜயன் வீட்டிற்கு போய்விட்டேன். அதன்பின்னிட்டு சுமார் 10 தினங்கள் கழித்து போலிசார் என்னை ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றபோது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அப்போது எனக்கு யார் மீதும் சந்தேகமில்லை என்று சொல்லிவிட்டேன். அதன்பின்னிட்டு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. என் தகப்பனார் மற்றும் என் சகோதரர்கள் இருவரும் சொத்துக்களை ஏற்கனவே பாகம் செய்துகொண்டார்களா என்றால் இல்லை. எனது தந்தை கடந்த 04.09.1998 அன்று 1.01 ஏக்கர் நிலத்தை பொறு்த்து விஜயன் பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

19.11.2010 அன்று என் தந்தை 5.34 ஏக்கர் நிலத்தை பொறுத்து விஜயன் பெயருக்கு மற்றொரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அப்படித்தான் என் தகப்பனார் என்னிடம் சொன்னார். அதே 5.34 ஏக்கர் நிலத்தை பொறுத்து என் தகப்பனார் என் மற்றொரு சகோதரான நடராஜன் பெயருக்கு மற்றொரு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 11.11.2011 அன்று எழுதிவைத்திருக்கிறார் என்றால் அப்படித்தான் என் தகப்பனார் என்னிடம் சொன்னார்.

அதன் பின்னிட்டு என் தகப்பனார் இறந்துவிட்டார் என்றால் என் தகப்பனார் இறப்பதற்கு முன்பாக என்னை அழைத்து சொத்தை யாரும் விற்பனை செய்யக்கூடாது என்பதால் பாகவழக்கு தாக்கல் செய்யும்படி என்னை கேட்டுக்கொண்டார். அதன்பின்னிட்டு என் தகப்பனார் 2012 ஆம் ஆண்டு இறந்துவிட்டார்.

அதன்பின்னிட்டு நானும் என் சகோதரி ஜெயலட்சுமியும் சேர்ந்து என் தாயார், சகோதரர்கள் நடராஜன் மற்றும் விஜயன் ஆகியோர்கள் மீது பாக வழக்கு தாக்கல் செய்தோம். பின்னிட்டு ஜெயலட்சுமி பின்வாங்கிவிட்ட காரணத்தினால் நான் மட்டும் வழக்கினை நடத்தி வந்தேன். 2015 ஆம் ஆண்டு என் கணவர் இறந்துவிட்டார். இறந்துபோன என் அண்ணன் நடராஜனுக்கு இந்துமதி என்ற ஒரு மகள் இருக்கிறார்.

என் அண்ணன் நடராஜனும், அவரது மகள் இந்துமதியும் சேர்ந்து மேற்படி தானசெட்டில்மெண்ட் சொத்தான 5.34 ஏக்கர் நிலத்தை பொறுத்து ஒரு சண்முகம் என்ற நபருடன் 06.11.2015 அன்று ஒரு கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் நான் அவ்வாறு கேள்விபட்டேன்.

**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இ்ல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை**

**<u>நீதிமன்ற கேள்விகள்</u>**

கேள்வி – 1ஆம் எதிரிக்கும், இறந்துபோன விஜயனுக்கும் எதாவது முன் விரோதம் உண்டா ?

பதில் – அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஆனால் 1ஆம் எதிரியின் சகோரரி சாந்தா என்பவர் தன்னுடைய பாகசொத்தை விஜயனுக்கு கிரையம் எழுதி கொடுத்திருந்தார். அது மட்டும் எனக்கு தெரியும்.

**<u>நீதிமன்ற கேள்வியை பொறுத்து 1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாந்தா உயிருடன் இருக்கிறார். சாந்தாவிற்கு 2 சகோதரிகள் உண்டு. சாந்தா அவரது இரண்டு சகோதரிகளை சேர்க்காமல் அவர் மட்டும் விஜயன் பெயருக்கு கிரையம் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ஆம் எதிரி சாந்தாவின் மீது வழக்கு தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியாது.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.